பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

06 07 2024 **SATURDAY** 6 45 **AM**

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- இந்திய ராணுவ வீரர்களின் வீரம் மற்றும் அர்ப்பணிப்பை கண்டு, நாடு பெருமிதம் கொள்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- பிரிட்டன் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் தமிழ் பெண்மணியான திருமதி உமா குமரனுக்கு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.
- பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ராங் மீது நடத்தப்பட்ட வன்முறைச் சம்வம், கண்டனத்திற்குரியது என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்..
- காவிரி நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினையில் மத்திய அரசு மௌனம் சாதிப்பதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப்பெருந்தகை குற்றம் சாட்டியுள்ளார்.
- இந்தியாவுக்கு எதிரான முதலாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், தென்னாப்பிரிக்கா 12 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

>>>><<<<

இந்திய ராணுவ வீரர்களின் வீரம் மற்றும் அர்ப்பணிப்பை கண்டு, நாடு பெருமிதம் கொள்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புத் துறையில் வீர தீர செயல்களுக்காக வழங்கப்படும் உயரிய விருதுகள் குடியரசுத்தலைவர் மாளிகையில் நேற்று வழங்கப்பட்டது.

இந்த விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வழங்கினார்.

இந்த விழாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்றார்.

இதனையொட்டி அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ராணுவ வீரர்களின் உயரிய தியாகங்கள் மக்களுக்கு உத்வேகம் அளிக்கக்கூடியதாக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

பிரிட்டன் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தொழிலாளர் கட்சி தலைவர் திரு. **Keir Starmer-**க்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் இங்கிலாந்து இடையேயான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தி அனைத்து துறைகளிலும் ஒருங்கிணைந்து செயல்பட இந்தியா எதிர்நோக்கி இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

**>>>><<<<**

பிரிட்டன் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் தமிழ் பெண்மணியான திருமதி உமா குமரனுக்கு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பிரிட்டனின் உள்ள **Stratford Bow** தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராக திருமதி. உமா குமரன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதன் மூலம் தமிழர்களுக்கு பெருமையை தேடித்தந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

**>>>><<<<**

தமிழகத்தில் நியாயவிலைக் கடைகளில் ஜூன் மற்றும் ஜூலை மாதத்திற்கான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் அனைவருக்கும் வழங்கப்பட்டு வருவதாக மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மே மற்றும் ஜூன் மாதங்களுக்கான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் அனைத்து அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி தவறான தகவல்களை வெளியிட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இம்மாதத்திற்கான தேவையான உணவுப் பொருட்கள் கையிருப்பில் உள்ளதாகவும் அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**>>>><<<<**

காவிரி நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினையில் மத்திய அரசு மௌனம் சாதிப்பதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப்பெருந்தகை குற்றம் சாட்டியுள்ளார்.

தஞ்சாவூரில் நடைபெற்ற அக்கட்சியின் மாவட்ட செயல் வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் ஆணைப்படி, காவிரியில் தமிழ்நாட்டுக்கு உரிய தண்ணீரை கர்நாடக அரசு திறந்துவிட மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு வேடிக்கை பார்க்கக்கூடாது என்றும் திரு. செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

**>>>><<<<**

வெளிநாடுகளில் மருத்துவப் படிப்பு பயின்ற இந்திய மாணவர்கள், நம் நாட்டில் மருத்துவ தொழிலை புரிவதற்காக நடத்தப்படும் தகுதித் தேர்வு இன்று நடைபெறுகிறது.

இந்த தேர்வை தேசிய தேர்வு வாரியம் நடத்துகிறது.

நாடுமுழுவதும் மொத்தம் 50 நகரங்களில் 71 மையங்களில் இந்த தேர்வு நடைபெறுகிறது.

இதற்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தேசிய தேர்வு வாரியம் தெரிவித்துள்ளது.

**>>>><<<<**

உத்தரபிரதேச மாநிலம், **Hathras** –ல் நிகழ்ந்த நெரிசலில் சிக்கி 121 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக, **Dev Prakash Madukoor** என்பவரை அம்மாநில காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் இவர் காவல்துறையின் முதல் தகவல் அறிக்கையில் முதல் குற்றவாளியாக பதிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னதாக, அவரை கண்டுபிடித்து தருபவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அவர் காவல்துறையால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்ற இந்த சம்பவத்திற்கு காரணமாக இருந்ததாக கூறி, ஏற்கனவே 6 பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

போலே பாபா என்றழைக்கப்படும் நாராயன் சாக்கர் ஹரி என்பவர் ஏற்பாடு செய்திருந்த ஆன்மிக நிகழ்ச்சியில் ஏற்பட்ட நெரிசல் காரணமாக நூற்றுக்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் விசாரணை நடைபெற்று வரகிறது.

**>>>><<<<**

பாதுகாப்புத் துறையில் வீர தீர செயல்களுக்காக வழங்கப்படும் உயரிய விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு புதுதில்லியில் வழங்கினார்.

கீர்த்தி சக்ரா விருதுகள் மத்திய ரிசர்வ் காவல்படையைச் சேர்ந்த **Rajkumar Yadava, Bablu Rabha, Sambhu Ray** மற்றும் ராஷ்ட்ரிய ரைஃபில் படையைச் சேர்ந்த பவன்குமார் ஆகியோருக்கு மரணத்திற்கு பிந்தைய விருதாக வழங்கப்பட்டது.

**>>>><<<<**

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ராங் மீது நடத்தப்பட்ட வன்முறை தாக்குதல், கண்டனத்திற்குரியது என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

மாநிலத்தை ஆளும் திமுக அரசு சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் வன்முறைச் சம்பவங்கள் அடுத்தடுத்து நிகழ்ந்து வருவதாகவும், இதனை கட்டுப்படுத்த அரசு தவறிவிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

சென்னையில் நடைபெற்ற இந்த சம்பவம் தொடர்பாக குற்றவாளிகளை பிடிப்பதற்கு 10 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக வடசென்னை காவல்துறை ஆணையர் திரு. ஆஸ்ராகர்க் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இச்சம்பவம் தொடர்பாக ஆறு பேரிடம் விசாரணை நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

இச்சம்பவத்திற்கு அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

>>>><<<<

தமிழகத்தில் படித்த இளைஞர்கள் கால்நடைப் பண்ணைகளை அமைக்க முன்வர வேண்டும் என்று பால்வளத்துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சர்வதேச சந்தையில் தமிழகத்தின் பால் மற்றும் பால் பொருட்களின் பங்கு உயரவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

உலக அளவில் பால் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

உலக பால் சந்தையில் தமிழகம் ஆதிக்கம் செலுத்த முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பால்வளத்துறையின் வளர்ச்சிக்காக கடந்த ஓராண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் திரு. மனோ தங்கராஜ் அந்த அறிக்கையில் எடுத்துரைத்துள்ளார்.

>>>><<<<

மத்திய அரசின் திட்டங்கள் பயனாளிகள் அனைவருக்கும் முழுமையாக சென்றடைவதற்கான இயக்கம், நித்தி ஆயோக் சார்பில் நாடுமுழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தமிழகத்தில் விருதுநகர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டாரத்தில் பள்ளி மாணவர்களின் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - கமலக்கண்ணன் 48 செகண்ட்ஸ்)

>>>><<<<

இருவரிச் செய்திகள்

பிரிட்டன் நாடாளுமன்றத்திற்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த திருமதி. **Liza Nandy** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

>>>><<<<

ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா-வை, இந்தியாவுக்கான செக் குடியரசின் தூதர் டாக்டர் **Eliska Zigova** சந்தித்து பேசினார்.

>>>><<<<

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று குஜராத் மாநிலம் காந்திநகரில் நடைபெறும் 102வது சர்வதேச கூட்டுறவு தின விழாவில் கலந்து கொள்கிறார்.

>>>><<<<

பெரம்பலூர் மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையான ரயில் போக்குவரத்து திட்டத்தை கொண்டு வருவதற்கு முழுமுயற்சி மேற்கொள்ளப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அருண் நேரு தெரிவித்துள்ளார்.

>>>><<<<

சென்னை தரமணியில் உள்ள தமிழ்நாடு அரசின் எம்ஜிஆர் திரைப்பட மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் ஒளிப்பதிவாளர் திரு. சந்தோஷ் சிவன் உடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

>>>><<<<

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் இந்த ஆண்டு நடைபெறவுள்ள 24வது கோடை விழாவில் கண்கவர் காய்கறி மற்றும் பழக்கண்காட்சியில் பழங்குடியின மக்களின் பாரம்பரிய நடன நிகழ்ச்சிகள் இடம்பெறும் என்று ஆட்சியர் திரு. பாஸ்கர பாண்டியன் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

தஞ்சாவூர் பெரிய கோவிலில் ஆஷாட நவராத்திரி விழா இன்று தொடங்கியது.

>>>><<<<

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மத்திய அரசின் பெண் குழந்தைகளை காப்போம், கற்பிப்போம் திட்டத்தின் கீழ், ஊடகவியலாளர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆட்சியர் திருமதி. சரயு தலைமையில் நடைபெற்றது.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

இந்தியாவுக்கு எதிரான முதலாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், தென்னாப்பிரிக்கா 12 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த தென்னாப்பிரிக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 189 ரன் எடுத்தது.

பின்னர் விளையாடிய, இந்திய அணி 4 விக்கெட் இழப்புக்கு 177 ரன் மட்டுமே எடுத்தது.

>>>><<<<

யூரோ கோப்பை கால்பந்துப் போட்டியில் ஸ்பெயின் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

>>>><<<<